சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை – சீர்மரபினர் நலம் – சீர்மரபினர் நல வாரியம் அமைத்து ஆணைகள் வெளியிடப்பட்டது – வாரியத்தில் உறுப்பினர் சேர்த்தல், உறுப்பினர்களுக்கு நல உதவிகள் வழங்குவது குறித்த ஆணைகள் வெளியிடப்படுகிறது

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் (பிந3)நலத்துறை.

அரசாணை (நிலை)எண் 29 நாள் 28.3.2008

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண். 13, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள். 20.4.2007.
2. அரசுக் கடித எண். 4509/பிந3/2007-1, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள். 16.5.2007.
3. அரசுக் கடித எண். 248/பிந3/2008-1, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள். 30.1.2008.

* * * *

ஆணை:

மேலே ஒன்று, இரண்டு மற்றும் மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணை மற்றும் அரசு கடிதங்களின்படி, 'சீர்மரபினர் சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலைகளில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கென சீர்மரபினர் நல வாரியம் அமைக்கப்பட்டது. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், திரு. பெ. மின்னல் கொடி அவர்களைத் துணைத்தலைவராகவும், அரசு சார் உறுப்பினர்களாக 7 பேர்களும் அலுவல் சாரா உறுப்பினர்களாக 13 பேர்களையும் கொண்டு சீர் மரபினர் நல வாரியம் இயங்கி வருகிறது.

2. சீர்மரபினர் வகுப்பினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளை உயர்த்த கள்ளர் சீரமைப்பு பள்ளிகள் நடத்துதல், விடுதிகள் நடத்துதல், பல்வேறு கல்வி உதவித் தொகைகள் வழங்குதல், பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், கரும் பலகைகள், சீருடைகள் போன்றவை வழங்குதல், 11-ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்குதல், வேலை வாய்ப்புப் பயிற்சிகள் அளித்தல், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கடனுதவி வழங்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுடன் சேர்த்து 20 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

3. சீர்மரபினர் நல வாரியத்தில் உறுப்பினர்களை சேர்த்து வாரிய உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நல

உதவிகளும் வழங்கப்பட வேண்டும் என்று இவ்வரசு முடிவு செய்து சீர்மரபினர் வாரியத்தில் உறுப்பினர்கள் சேர்க்கை மற்றும் உதவித் தொகைகள் வழங்குவதற்கான வழிமுறைகள் குறித்து அரசு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

i) அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினராகும் தொழிலாளர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தாருக்கும் கீழ்வருமாறு வழங்கப்படும் பல்வேறு நல உதவிகள், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கட்டுப்பாட்டில் வரும் **சீர்மரபினர் நல வாரியத்தில் உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொள்பவர்களுக்கும் அவர்களது குடும்பத்தாருக்கும்** வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1. <u>விபத்து ஈட்டுறுதி திட்டத்தின் கீழ்:</u> | | |
| | அ) விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித் தொகை | ரூ.1,00,000/- |
| | ஆ) விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | ரூ.10,000/- முதல் ரூ.1,00,000/-வரை |
| 2. | இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை | ரூ. 15,000/- |
| 3. | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித் தொகை | ரூ.2,000/- |
| 4. <u>கல்வி உதவித் தொகை</u> | | |
| | அ) 10-ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1000/- |
| | ஆ) 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1000/- |
| | இ) 11–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1000/- |
| | ஈ) 12–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1500/- |
| | உ) 12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு | ரூ.1500/- |
| | ஊ) முறையான பட்டப் படிப்புக்கு<br>மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்புக்கு | ரூ.1500/-<br>ரூ.1750/- |
| | எ) முறையான பட்ட மேற்படிப்புக்கு<br>மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்புக்கு | ரூ.2000/-<br>ரூ.3000/- |
| | ஏ) தொழிற்கல்வி பட்டப் படிப்புக்கு<br>மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்புக்கு | ரூ.2000/-<br>ரூ.4000/- |
| | ஐ) தொழிற்கல்வி பட்ட மேற் படிப்புக்கு<br>மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு | ரூ.4000/-<br>ரூ.6000/- |
| | ஒ) ஐ.டி.ஐ அல்லது தொழிற்பயிற்சி படிப்புக்கு<br>மாணவர் இல்ல வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது பல்தொழில் பயிற்சி படிப்புக்கு | ரூ.1000/-<br>ரூ.1200/- |
| 5. | திருமண உதவித் தொகை | ரூ.2000/- |
| 6. <u>மகப்பேறு உதவித் தொகை</u> | | |
| | அ) மகப்பேறு: மாதம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம்<br>ஆ) கருச்சிதைவு/ கருக்கலைப்பு | ரூ.6000/-<br>ரூ.3000/- |
| 7. | மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | ரூ.500/- வரை |
| 8. | முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் | ரூ.400/- |

ii) இதன்படி மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் சீர்மரபினர் நல வாரியத்தில் உறுப்பினர்களை பதிவு செய்யும் அலுலவராக நியமனம் செய்யப்படுகிறார்.

iii) சீர்மரபினர் இனத்தை சேர்ந்த தொழிலாளர்களின் குடும்பங்களைக் கண்டறிந்து அடையாள அட்டைகள் வழங்கும் பணியினை சீர்மரபினர் நல வாரியத்தின் உறுப்பினர்–செயலரான மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் மேற்கொள்வார்.

iv) சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 18 வயது முடிவடைந்த, ஆனால் 60 வயது முடிவடையாத ஒவ்வொருவரும் சீர்மரபினர் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய தகுதி பெற்றவராவர்.

v) உறுப்பினர் பதிவுக்குரிய விண்ணப்பங்களை தகுதி வாய்ந்த உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின நல அலுவலர் மேற்கொள்வார். இவ்வாறு பெறப்பட்ட உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பங்களைப் பெற்று தொகுத்து, சீர்மரபினர் நல வாரியத்தின் உறுப்பினர் செயலர் ஆன மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையருக்கு அனுப்பி, அடையாள அட்டைகளைப்பெற்று உறுப்பினர்களுக்கு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின நல அலுவலர் வழங்குவார். நிதி உதவி வழங்கக்கோரும் விண்ணப்பங்களையும் வாரியத்தின் உறுப்பினர்–செயலருக்கு அனுப்பி ஒப்புதல் பெற்று, தகுதியான உறுப்பினர்களுக்கு நல உதவிகள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின நல அலுவலர் மூலம் வழங்கப்படும்.

vi) வாரிய உறுப்பினர் சேர்க்கைக்குரிய விண்ணப்ப படிவம், வாரியத்தின் விதிமுறைகள், வாரியத்தின் இதர செயல்பாடுகள் முதலிய அனைத்திற்கும் தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் இதர அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பின்பற்றப்படும் அனைத்து நடைமுறைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

vii) பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கு மாவட்ட நிர்வாகத்திற்கு தேவையான நிதி சீர்மரபினர் நல வாரியத்தின் நிதியிலிருந்து வழங்கப்படும்.

(viii) மேற்காணும் நிதி உதவிகள் யாவும் தகுதியான நபர்களுக்கு மட்டுமே அளிக்கப்படும். அரசு/அரசு சார்ந்த மற்றும் அமைப்பு சார்ந்த நிறுவனங்களில் (Organised Sector)பணிபுரிந்து அந்நிறுவனங்களில் வழங்கப்படும் அனைத்து சலுகைகளையும் பெறும் சீர்மரபினர் இத்திட்டங்களின் பயன்களை பெற இயலாது. வேறு நல வாரியங்களில் உறுப்பினராக உள்ள சீர்மரபினர் **ஏதேனும் ஒரு நல வாரியத்தின் மூலம் மட்டும்** தான் நலத்திட்ட உதவிகளைப் பெற தகுதியுடையவர் ஆவார்.

ix) மேற்குறிப்பிட்டுள்ள பணிகள் மாவட்டங்களில் சீராக நடைபெறுவதைக் கண்காணிக்கவும் ஆய்வு செய்யவும் மாநில அளவில் சீர்மரபினர் நலவாரியத்திற்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகிறது.

x) சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை, அடையாள அட்டை வழங்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை, நல உதவிகள் இனம் வாரியாக வழங்கப்பட்ட எண்ணிக்கை மற்றும் தொகை, மொத்த பயனாளிகள் எண்ணிக்கை மற்றும் தொகை போன்ற விவரங்கள் அடங்கிய அறிக்கையினை பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு வாரியத்தின் உறுப்பினர்–செயலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**4.** மேற்குறிப்பிட்டவாறு நல உதவிகள் சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு வழங்குவதற்காகவும், இது தொடர்பான பிற பணிகளை மேற்கொள்வதற்காகவும் சீர்மரபினர் நலவாரியத்திற்கு ரூபாய். 2,00,00,000 (ரூபாய் இரண்டு கோடி) அனுமதித்து ஆணையிடப்படுகின்றது. சீர்மரபினர் வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவித் திட்டங்களுக்கான நிதியினை தேவைக்கேற்ப மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்ய மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

**5.** மேலே பத்தி **4–**ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் புதிய கணக்குத்தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:-

“**2225** ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்
**80** பொது
**101** சீர்மரபினர்–ஏனைய நாடோடி இனத்தவர் நலன்–I திட்டத்தில் சேராதது
AM சீர்மரபினர் நல வாரியம்
**09** உதவி மானியங்கள்
**03** குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்”
DPC 2225-80-101-AM-0930

**6.** மேற்சொன்ன புதிய கணக்கு தலைப்பிற்கு ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, சென்னை–**5**, மதிப்பீடு, கணக்கு, நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரி ஆவார்.

கணக்குகளில் மேற்ச்சொன்ன புதிய கணக்கு தலைப்பினை தொடங்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர்/ கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**7.** மேலே பத்தி **4–**ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் சீர்மரபினர் நல வாரியத்திற்கு பணமாக வழங்கப்படாமல் இவ்வாரியத்தின் உறுப்பினர் செயலர் பெயரிலான தன்வைப்புக் கணக்கில் காசோலை/வரைவோலை மூலம் வரவு வைக்கப்பட வேண்டும்:-

”K. வைப்பீடுகளும் முன்பணமும் (b) வட்டியில்லா வைப்புத் தொகைகள் **8443**-00 உரிமையியல் வைப்புத் தொகைகள். **800** பிற வைப்புத் தொகைகள் DD சீர்மரபினர் நல வாரியத்தின் வைப்புத் தொகைகள் (DPC 8443-00-800-DD --000G) (Receipts) (DPC 8443-00-800-DD ---0004 (Outgo)”

8. இச்செலவினம் ஒரு “புதுப்பணி” குறித்த செலவினமாகும். இதற்கான நிதி **2007–08–**ம் ஆண்டின் இறுதி துணை மதிப்பீடுகளில் ஒதுக்கப்படும். **2007–08** ஆம் ஆண்டின் இறுதி துணை மதிப்பீட்டிற்கு சட்டமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு இச்செலவினத்தை மேற்கொள்ளுமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 845/FS/P/08 நாள் 13.3.08–ன்படி இசைவு பெற்று வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.2006 (இரண்டாயிரத்து ஆறு ) ஆகும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந. வாசுதேவன்,
அரசுச் செயலாளர்

<u>பெறுநர்</u>

ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, சென்னை-5
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர்,சென்னை.–5
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
சீர்மரபினர் நல வாரியத்தின்தலைவர், துணைத்தலைவர் மற்றும்
அனைத்து அலுவல்சாரா உறுப்பினர்கள்(சீர்மரபினர் நல வாரிய
உறுப்பினர் செயலர் வழியாக)
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நல அலுவலர்கள்
அரசு செயலாளர், நிதித்துறை, சென்னை–9.
அரசு செயலாளர், வருவாய்த்துறை, சென்னை–9.
அரசு செயலாளர், சமூக நலம் மற்றும் சத்துணவுத்துறை, சென்னை–9.
அரசு செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–9.
அரசு செயலாளர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை–9.
இயக்குநர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை-6.
முதலமைச்சரின் செயலர், சென்னை–9,
மாநில கணக்காயர், சென்னை18/35
கருவூல கணக்கு ஆணையர், சென்னை–15,
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை.–5
நிதி (வரவு–செலவு பொது I,II)/வருவாய்/பள்ளிக்கல்வி/பி,மிபி,ந)துறைகள், சென்னை–9.
தொழிலாளார் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை–9
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9
தலைமைச் செயலரின் தனிச் செயலர், சென்னை–9
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.